பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 04 2024 6 30

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக பிஜேபி பாடுபட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. வேலைவாய்ப்பின்மை பிஜேபி ஆட்சியில் உச்சத்தில் இருப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

3. திமுக ஆட்சியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை 40 சதவீதம் உயர்ந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

4. கச்சதீவை சட்டப்பூர்வமாக மீட்பது சாத்தியம்தான் என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ தெரிவித்துள்ளார்.

5. கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயாவும், **Tharun Mannepalli** -வும் பட்டம் வென்றனர்.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**[]<<<>>>[]**

வளர்ச்சிபெற்ற இந்தியாவுக்கான தேர்தலாக வரும் மக்களவைத் தேர்தல் அமைந்துள்ளது என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் சஹாரன்பூரில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், கடந்த ஐந்து ஆண்டுகளில் பிஜேபி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இந்தியா உலக அளவில் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக உருவாகியுள்ளது என்று கூறினார்.

தமது கட்சி எவ்வித பாகுபாடுமின்றி மக்களுக்கான திட்டங்களை கடந்த பத்து ஆண்டுகளாக செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

அரசின் கொள்கைகளும், நலத்திட்டங்களும் அனைத்து தரப்பினரையும் சென்று சேர வேண்டும் என்று பாடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமய சார்பின்மையும், சமூக நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் தாங்கள் உறுதியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும், ஒவ்வொரு குடிமகனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதிலும் தமது கட்சி கவனம் செலுத்தி வருவதாக திரு நரேந்திரமோடி கூறினார்.

**[]<<<>>>[]**

மத்தியில் பிஜேபி அரசின் நிர்வாகத் திறமையின்மையால் நாட்டில் வேலையில்லா பிரச்சினை உச்சத்தை தொட்டுள்ளதாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி வதேரா கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், நாட்டின் ஜனநாயக அமைப்புகள் செயலிழந்து காணப்படுவதாகத் தெரிவித்தார்.

பிஜேபி ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும் அவர் கூறினார்.

அவர்கள் கொண்டு வந்த அக்னிவீர் திட்டம், நிரந்தர வேலைவாய்ப்புக்கான மக்களின் நம்பிக்கையை தகர்த்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விவசாயிகள் பிரச்சினைகளை கண்டுகொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் இந்த தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்றும் திருமதி பிரியங்கா காந்தி கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் திமுக ஆட்சியில் அரிசி எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை 40 சதவீதம் உயர்ந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருச்சியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மத்தியில் காங்கிரஸ், பிஜேபி ஆகிய இரு கட்சிகளுடனும் கூட்டணி அரசில் இருந்த திமுக தமிழகத்தின் வளர்ச்சிக்காக ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யவில்லை என்று குற்றம்சாட்டினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மூன்றரை லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கிய அக்கட்சி மாநிலத்தின் நலனுக்காக எந்த திட்டங்களையும் நிறைவேற்றவில்லை என்று அவர் கூறினார்.

ஐ என் டி ஐ கூட்டணி பிரதமர் வேட்பாளரை முடிவு செய்யாமலேயே மக்களவைத் தேர்தலை சந்திப்பதாக திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

[]<<<>>>[]

பிஜேபி கடந்த பத்து ஆண்டுகளில் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் பெட்ரோல் டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலையை உயர்த்தியதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு ஜி ராமகிருஷ்ணன் கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தேர்தலை கருத்தில் கொண்டு சமையல் எரியாவு விலை 100 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

[]<<<>>>[]

கச்சதீவை சட்டப்பூர்வமாக மீட்பது சாத்தியம்தான் என்று மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ கூறியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கச்சத்தீவை திரும்பப்பெற வேண்டுமென நாடாளுமன்றத்தில் தமது கட்சி சார்பில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், நீதிமன்றமே முடிவெடுத்து அரசுக்கு உரிய உத்தரவை பிறப்பிக்கும் என்றும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது திருப்பூர் மக்களவைத் தொகுதி

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்திலும் மாவட்டந்தோறும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி ஒத்தக்கடை யானைமலையில் மலையேற்றம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து மூத்த வாக்காளர்கள் ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்,

நாமக்கல் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி குடிநீர் கேன்களில் விழிப்புணர்வு ஸ்டிக்களை ஒட்டும் பணி இன்று நடைபெற்றது.

தென்காசியில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி விவசாயிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி ஆட்சியர் திரு கமல்கிஷோர் முன்னிலையில் நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டத்தில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் பங்கேற்ற விழிப்புணர்வு மாரத்தான் கோட்டி நடைபெற்றது.

[]<<<>>>[]

மாநிலத்தில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பு செலவின பார்வையாளர் திரு பி ஆர் பாலகிருஷ்ணன் தலைமையில் தேர்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அரக்கோணம் மக்களவைத் தொகுதிக்கு கூடுதலாக பெறப்பட்ட 330 வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்க்கும் பணி அரசியல் கட்சி பிரநிதிகள் முன்னிலையில் இன்று நடைபெற்றதாக ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திருமதி வளர்மதி தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி தொகுதியிலும் வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்க்கும் பணி இன்று மேற்கொள்ளப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 85 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்களிடம் தபால் வாக்குகளை பதிவு செய்யும் பணி தொடங்கியுள்ளது.

தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி நாளை நடைபெறும் என ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திரு லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினர் திரு புகழேந்தி உடல்நலக்குறைவு காரணமாக இன்று காலமானார். அவருக்கு வயது 71.

புகழேந்தி மறைவுக்கு தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் உதகையில் கோடை சீசனையொட்டி இன்று குதிரைப்பந்தயம் தொடங்கியது,

இதனை சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கண்டு ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயாவும், **Tharun Mannepalli** -வும் பட்டம் வென்றனர்.

அஸ்தானாவில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயா 21-15, 21-16 என்ற செட் கணக்கில் இஷாராணி பருவா-வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Tharun Mannepalli** 21-10, 21-19 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Soong Jooven –**ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் **Sanjai Srivatsa Dhanraj - Maneesha** இணை, மலேசிய இணையிடம் தோல்வியடைந்தது.

***End of News***